FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறுவெளிக்களநிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
## Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | தொடர்பாடலும் ஊடககற்கையும் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

பகுதி Is

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 2 | 11) 4 | 21) 1 | 31) 2 | 41) 4 |
| 2) 4 | 12) 3 | 22) 4 | 32) 5 | 42) 2 |
| 3) 5 | 13) 1 | 23) 2 | 33) 1 | 43) 2 |
| 4) 3 | 14) 4 | 24) 3 | 34) 4 | 44) 3 |
| 5) 3 | 15) 5 | 25) 1 | 35) 3 | 45) 2 |
| 6) 1 | 16) 2 | 26) 5 | 36) 5 | 46) 4 |
| 7) 4 | 17) 5 | 27) 5 | 37) 5 | 47) 3 |
| 8) 5 | 18) 3 | 28) 4 | 38) 5 | 48) 5 |
| 9) 2 | 19) 5 | 29) 3 | 39) 3 | 49) 4 |
| 10) 5 | 20) 3 | 30) 4 | 40) 1 | 50) 5 |

(50 x 2 = 100 புள்ளிகள்)

agaram.lk

பகுதி II

01)

1) தகவல் வழங்கல்
கல்வியூட்டுதல் / அறிவு வழங்குதல்
தூண்டலை ஏற்படுத்துதல்.
மகிழ்ச்சிப் படுத்தல் / பொழுதுபோக்களித்தல். (2 புள்ளிகள்)

2) முன்னயாத்தம், குறிக்கோளைக் கொண்டிருத்தல்.
பல்வேறு தொடர்பாடல் கருவிகளைப் பயன்படுத்தல்.
வாய்மொழி சாராத் தொடர்பாடல் வழிமுறைகளைப் பயன்படுத்துதல்.
கலங்கரை விளக்க நுட்பமுறையை பயன்படுத்துதல்.
வெளிச்சவீட்டுத் தொழிநுட்பம் / கலங்கரை விளக்க உபாயமுறை.
பெறுநரை மையப்படுத்திய தொடர்பாடல், நேரமுகாமைத்துவம்.
(விபரித்திருத்தல் அவசியம்) (4 புள்ளிகள்)

3)
- ஒருவர் தன்னோடு தான் தொடர்பாடலில் ஈடுபடுதல். ஒரு நபருக்குள் நடைபெறும் தகவல் பரிமாற்றம்.
- ஐம்புலன்களின் ஊடாக தகவல் பரிமாறப்படும்.
- ஏனைய தொடர்பாடல்களிற்கு அடிப்படையான தொடர்பாடல்.
- சுய பார்வை, சுய எண்ணக்கரு விருத்தியுடன் தொடர்புடையது.
- வேறு நபர்களின் தலையீடு காணப்படமாட்டாது. (1/2 x 4 = 2 புள்ளிகள்)

விபரித்திருத்தல் அவசியம்
2 x 2 = 4 புள்ளிகள்
6 புள்ளிகள்

4) • எழுத்து அல்லது வாய்மொழிச் சொற்களின் பயன்பாடு இன்றி நிகழும் தொடர்பாடல் வாய்மொழியல்லாத் தொடர்பாடல் எனப்படும்.
- இவற்றுள் குறியீடுகள், முக அசைவுகள், விழிவழித்தொடர்பு, ஆடை அலங்காரம், அணிகலன்கள், கலை பண்பாடுகள் பொருட்பயன்பாடு, உடல் அசைவுகள் ஆகியன இவற்றுன் அடங்கும்.
- வாய்மொழி சாராத் தொடர்பாடல் ஐம்புலன்களுடன் தொடர்புபட்டது.
- குறைந்தளவு அகிலம் சார்ந்தும் மற்றும் பெருமளவில் பண்பாடு சார்ந்தும் அமையப் பெறும்.
- தொடர்ச்சியானது.
- வாய்மொழி சார் தொடர்பாடலுடன் இணைத்தும் பயன்படுத்தலாம்.
- பல வடிவங்களினைக் கொண்டது.

விவரித்திருந்தால் மாத்திரம் மொத்தப் புள்ளிகள் வழங்கப்பட வேண்டும் 4 x 2 = 8 புள்ளிகள்

02)

1) ஓரிடத்தில் உருவாக்கப்பட்ட அல்லது தெரிவு செய்யப்பட்ட தகவல் அவ்வாறோ அல்லது அதற்குச் சமமானதாகவோ வேறொரு இடத்தில் மீண்டும் உருவாக்கப்படுவதே தொடர்பாடலாகும். எனக் குறிப்பிடுகின்றார். (2 புள்ளிகள்)

2) • செவிமடுத்தலை பாதிக்கும் காரணிகள்
  - ➢ தேவையற்ற தன்மை என உணருதல்.
  - ➢ சரியான கவனமின்மை
  - ➢ புலக்காட்சியில் குறைபாடு.
  - ➢ மொழியை புரிந்து கொள்வதில் குறைபாடு.
  - ➢ ஒரு நிலைப்படுத்தப்பட்ட தன்மையற்று இருத்தல்.
  - ➢ செவிமடுத்தலுக்கு இசைவற்ற புறச்சூழல் காரணிகள்

- செவிமடுத்தலை விருத்தியாக்கும் விடயங்கள்
  - ➢ கேட்கும் விடயத்தில் ஒரு பற்றினை ஏற்படுத்துதல்.
  - ➢ கேட்க வேண்டும் என்பதனை மானசீமாக உருவாக்குதல்.
  - ➢ பேச்சின் முக்கிய சொற்கள், வாக்கியங்களை மனதில் உட்படுத்தி கொள்ளுதல்.
  - ➢ தனக்கு கிடைத்த தகவல்களின் முக்கியத்துவம் அல்லது முக்கியதுவமின்மை பற்றி தீர்மானித்தல். (4 புள்ளிகள்)

3) அ. குடும்பம், பாடசாலை, மதநிறுவனங்கள், சமூக நிறுவனங்கள், சமவயது குழுக்கள், தனியார் கல்வி நிறுவனங்கள். (2 புள்ளிகள்)

ஆ. • சமூக அற ஒழுக்க விழுமியங்களை பேணிக்கொள்வதற்கு சமூகத்தினால் மரபு ரீதியாக பின்பற்றப்பட்டு வருகின்ற கட்டமைப்பு.
- பல்வேறு அமைப்புகளும் இதனை தீர்மானிக்கின்றன.
- சமூக கட்டமைப்பில் பல்வேறு அதிகார குழுக்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன.
- தனிமனிதன், குடும்பம், பாடசாலை, நிறுவனங்கள் ஆகியன இதில் முதன்மையாக செல்வாக்கு செலுத்திக் கொள்ளும். (4 புள்ளிகள்)

4) • தொடர்பாடல் ஒரு குறிக்கோளைக் கொண்டுள்ளது.
- தொடர்பாடல் குறியீட்டுத் தன்மையுடையது.
- ஒரு வழியாகவும் இரு வழியாகவும் நடைபெறும்.
- தொடர்பாடல் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு இயைவானது.
- தொடர்பாடல் பலவிதமானது.
- தொடர்பாடல் சக்தி வாய்ந்தது.
- தொடர்பாடல் ஒரு செயன்முறையாகும்.

விபரிக்கப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப் புள்ளியும் வழங்குக. (8 புள்ளிகள்)

agaram.lk

03)

1)
- பிரதான வழிப்போக்கிலிருந்து தோன்றிய உப வழிப்போக்கு.
- துணைப்பண்பாட்டு அம்சங்களினைக் கொண்டிருத்தல்.
- பிராந்திய அடையாளங்களினை வெளிப்படுத்துதல்.
- தொழிலார்ந்த மற்றும் சூழலமைவு சார்ந்த அடையாளங்களினை வெளிப்படுத்துதல்.
- துணைச் சமூக அம்சங்களினை கொண்டிருத்தல்.
- வரையறுக்கப்பட்ட குழுவினருக்கிடையில் செயற்படுத்தப்படுவது.
- ஒப்பீட்டளவில் பொதுவாக மாற்றமடைவது. (2 புள்ளிகள்)

2)
- இலகு மொழி / சொற்கள் / வசனங்கள்
- கண்ணால் பார்ப்பதற்கு அல்ல செவியால் கேட்பதற்கான மொழிப்பாவனை.
- வசனத்தை முடிக்கும் போது முடிவு என நேயர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.
- மொழியில் இடம் பெறுகின்ற வேற்றுமைகளினை தெளிவாக விளங்கிக் கொள்ளப்பட வேண்டும்.
- இசைக் கருவிகளின் பாவனையை தேவையான அளவு சரியாகப் பயன்படுத்த வேண்டும்.
- வாக்கியத்தை முடிக்கும் குறிகள் சரியாக தெளிவூட்டப்படவேண்டும்.
- எழுதும் பகுதிகளுக்கு ஏற்ப வகைப்படுத்தி எழுதுதல்.
- சம்பவ மாற்றங்களிற்கு விசேட வெளிப்பாடுகளினை பாவித்தல். (4 புள்ளிகள்)

3) 1. தொலைக்காட்சி ஊடகம்.
- நேர அளவு மட்டுப்படுத்தப்பட்டது.
- நிகழ்ச்சியின் தன்மை / வடிவங்களிற்கு ஏற்ப மொழிநடை.
- பார்வையாளரின் இரசனை ஆர்வத்தினை தூண்டக் கூடியதன்மை.
- ஆவனப்படுத்தி பேணிப்பாதுகாத்து கொள்ள முடியாத தன்மை.
- தொழில்நுட்ப ரீதியிலான மொழிப் பயன்பாடு.
- ஒளிபரப்பு நேரத்திற்கு ஏற்ப மொழிப்பயன்பாடு மட்டுப்படுத்தப்படுகின்றமை.
- பண்பாட்டு மட்டுப்பாடுகளில் மொழியை கவனமாக கையாள வேண்டிய நிலை.

2. புதிய ஊடகம்
- மொழி பயன்படுத்தப்படும் போது அதன் கொள்ளளவின் தன்மைக்கு ஏற்ற மொழிப் பயன்பாடு.
- சுருக்கமான முறையில் மொழிப்பயன்பாடு.
- தேசிய மொழிகளில் எழுதவேண்டுமெனில் வேறு விசேட வழிமுறைகளினை பயன்படுத்த வேண்டும்.
- மொழிப் பயன்பாட்டில் ஒரு சீர்நிலை இல்லை.

விபரிக்கப்படல் வேண்டும் (6 புள்ளிகள்)


4) ஊடக வன்முறை பற்றி விளக்கியிருத்தல் (2 புள்ளிகள்)
ஊடக வகைப்பாடுகளுடன் உதாரணங்களுடன் ஆராய்தல். (4 புள்ளிகள்)
விமர்சனப் பாங்குடன் அச்சு ஊடக வன்முறை இலத்திரனியல் ஊடகவன்முறை புதிய ஊடக வன்முறை என்றவாறு பாகுபடுத்தி எழுதி தகுந்த நிறைவுரை இருந்தால் மாத்திரம் முழுப் புள்ளியும் வழங்குக. நிறைவு 2 புள்ளிகள்
(2 + 4 + 2 = 8 புள்ளிகள்)

04)

1)
- வெகுசன ஊடகங்களினால் தோற்றம் பெறும் பண்பாடு.
- நுகர்வோருக்கு எதுவித அதிகாரமும் வழங்கப்படமாட்டாது.
- வியாபார உற்பத்திகளுடன் தொடர்புடையது.
- மேலைத்தேய பண்பாட்டியல் அம்சங்களுடன் தொடர்புடையது.
- வர்த்தக மயமாதலுடன் இணைந்திருத்தல்.
- மாயையான / போலியான ஊடகச் சூழலை உருவாக்கவல்லது.
- தொழிலாளர் வர்த்தகத்தினரிடையே வேகமாக பரவுதல்.


agaram.lk

2)




- ஜோன் கல்ரங்கின் முரண்பாடு முக்கோணி.

.




விளக் ... வழங்குக. (4 புள்ளிகள்)

3)
- ஆலோசனைகளினை பெற்றுக் கொள்ளல்.
- சமய நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.
- கலை, இரசனையில் ஈடுபடுதல்.
- தியானப் பயிற்சியில் ஈடுபடுதல்.
- ஏதாவது ஆக்கம் ஒன்றை படைத்தல்.
- போதியளவு ஓய்வும் அமைதியும்.
- தனிமையில் இருக்காது பிடித்தவர்கள் / நண்பர்களுடன் உரையாடுதல்.
- உள்ளத்தை இலகுவாக வைத்திருக்க பழகுதல்.
- செயற்பாடுகளை உரியதிட்டமிடலுடன் மேற்கொள்ளல். ½ x 6 = 3 புள்ளிகள்

விபரித்திருத்தல் 3 புள்ளிகள்
மொத்தம் 6 புள்ளிகள்

agaram.lk

4) ஆரோக்கியமற்ற குணங்குறிகள்.
- ஒருவரையொருவர் வெறுத்தல்.
- தொடர்பாடலின்றி போதல்.
- துர்வசனங்களை பயன்படுத்துதல்.
- வீட்டிலிருக்கும் நேரம் குறைவடைதல்.
- ஒருவரையொருவர் சந்தேகப்படுதல்.
- மற்றயவர் பற்றிய புரிந்துணர்வு இல்லாது போதல்.

எதிர்விளைவுகள்
- குடும்ப உறவு சீர்குலைதல்.
- பிள்ளைகளின் கல்வி பாதிப்படைதல்.
- எதிர்பார்ப்புக்கள் பாதிப்படைதல்.
- சமூக வெறுப்புக்கு ஆளாதல்.
- ஒருவர் மற்றவருக்கு பாதிப்பு ஏற்படும் படி நடத்தல்.

(விளக்கத்துடன் தரப்பட்டால் 8 புள்ளி வழங்கவும்.)

05)

1) அறிவு, பண்பாடு, சட்டம், வழிபாடு. நம்பிக்கை, கலை, சம்பிரதாயம்.
(2 புள்ளிகள்)

2)
- சமூக பண்பாட்டு பல்வகையை பாதிப்படைதல்.
- நடைமுறை வாழ்வியல் கோலம் பாதிப்படைதல்.
- மனித தொடர்புகள் நலிவடைதல்.
- ஆடை அலங்கார முறைகள் மாற்றத்திற்குள்ளாதல்.
- தொழில்நுட்பத்தோடு நெருங்கிய தொடர்புடையது.
- பூகோளமயமாதலுடன் நெருங்கிய தொடர்புடையது.
- புதிய சமூகத்தை உருவாக்கவல்லது. (4 புள்ளிகள்)

3) ◆ குடிமக்கள் செய்தி அறிவிப்பில் ஈடுபடுவர்.
- ◆ ஊடகம் கவனம் செலுத்தாத விடயம் அறிக்கையிடப்படும்.
- ◆ பிரசைகளின் குரல் ஒரு முகப்படுத்தப்படும்.
- ◆ புதிய ஊடகத் தொழினுட்பம் பயன்படுத்தப்படும்.
- ◆ ஜனநாயகத் தொடர்பாடல் வழிமுறை பயன்படும்.
- ◆ தொழில் சார் அறிக்கையிடல் காணப்பட முடியாததாக இருக்கும்.

| **பிரசை ஊடகவியலாளர்** | **வெகுசன ஊடகவியலாளர்** |
|---|---|
| ◆ சுயாதீனமாக ஊடகப்பணியில் ஈடுபவர். | முழுநேர / உழைக்கும் ஊடகவியலாளர். |
| ◆ வேதனம் வழங்கப்படமாட்டாது. | வேதனம் வழங்கப்படும். |
| ◆ பயிற்சி பெறாதவர். | பயிற்சி பெற்றவர். |
| ◆ ஊடக ஒழுக்கநெறி பற்றிய போதிய விளக்கம் காணப்படாது. | ஊடக ஒழுக்கநெறி பற்றிய போதிய விளக்கம் காணப்படும். |
| ◆ நிறுவனக் கட்டமைப்புக்கு உட்படாதவர். | நிறுவனக் கட்டமைப்புக்கு உட்பட்டவர். |
| ◆ கருத்துப் பரிமாற்றம் | கருத்து செலுத்துகை காணப்படும். |

(2 + 4 = 6 புள்ளிகள்)
*(6 புள்ளிகள்)*

4) ஊடக விளங்கறிவின் திறன்கள்.
- பகுப்பாய்வு செய்யும் திறன்.
- மதிப்பீடு செய்யும் திறன்
- உபயோகிக்கும் திறன்.
- நிர்மாணிக்கும் / உருவாக்கும் திறன். *(2 புள்ளிகள்)*

ஊடக விளங்கறிவின் முக்கியத்துவம்.
- ஜனநாயக சமூகத்தில் பிரசை ஒருவர் வாழ்வதற்கு.
- நாளாந்த வாழ்க்கையை சீரமைத்து கொள்வதற்கு.
- கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான உரிமைகள் யதார்த்தமானதாக காணப்படுவதற்கு.
- நபர்கள் மற்றும் சமூகத்தின் நாளாந்த நிகழ்ச்சி நிரல்களை வடிவமைத்தல்.
- தேசிய அபிவிருத்திக்காக ஊடகத்தை சரியாக பயன்படுத்துதல்.
- வியாபார உத்திகள் வாயிலாக கட்டியெழுப்படும் போலியான கலாசாரத்தினை புரிந்து கொள்வதற்கு, *(6 புள்ளிகள்)*

(2+6=8 புள்ளிகள்)

agaram.lk

*06)*

1) மக்கள் தொடர்பு என்பது ஒரு அமைப்புக்கும் அதனுடன் இணைந்த மக்களுக்கும் இடையிலான பரஸ்பர புரிந்துணர்வினையும் நன்மதிப்பையும் உருவாக்கவும் பேணவுமாக எடுக்கப்படும் திட்டமிடப்பட்டதும் நீடித்திருப்பதுமான அனைத்து முயற்களுமாகும்.

2) ◆ ஊடக மாநாட்டின் இலக்கை நிச்சயம் செய்தல்.
- ◆ மாநாட்டில் பங்குபற்றும் நபர்கள் யாரென தீர்மானித்தல்.
- ◆ ஊடக மாநாடு நடைபெறும் திகதி, நேரம், இடம் என்பவற்றை தீர்மானித்தல்.
- ◆ பங்கு பற்றுபவர்களிற்கு உரியவகையில் அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றதா என்பதனை உறுதிப்படுத்தல்.
- ◆ அழைக்கப்பட்டவர்கள் பங்கேற்றுள்ளனரா என்பதனை உறுதிப்படுத்துதல்.
- ◆ வினாக்களினை கேட்பதற்கு சந்தர்ப்பம் அளித்தல்.
- ◆ கருத்துக்கள் முன்வைக்க வேண்டிய வழிமுறைபற்றி தீர்மானித்தல்.

3) பாரம்பரிய ஊடகம்
- மரபு ரீதியான நாட்டாரியல் தொடர்பாடல் வடிவங்களினைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் தகவல் பரிமாற்ற ஊடக வழிமுறை.
  உ + ம் - நாட்டார் கதை, நாட்டார் பாடல், கிரியைகள் சடங்குகள்.

வெகுசன ஊடகம்

- பரந்துபட்ட மக்கள் கூட்டத்திற்கு ஒரே நேரத்தில் குறித்த ஒரு தகவலினை பரிமாறிக் கொள்வதற்கு பயன்படுத்தப்படும் ஊடக வழிமுறை இதுவாகும்.
  உ + ம் - பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி

புதிய ஊடகம்

- இணையத்தன ஊடக வழிமுறையினை பயன்படுத்தி சர்வதேச ரீதியாக தகவல் பரிமாறக் கூடிய ஊடக வழிமுறை இதுவாகும்.
  உ + ம் - சமூக வலைத்தளங்கள், இணைய வலைப்பின்னல். *(3 புள்ளிகள்)*

வெகுசனத் தொடர்பாடலின் அடிப்படைப் பண்புகள்.

- ஒரே நேரத்தில் பரந்து பட்ட மக்களுக்கு தகவல் பரிமாற்றப்படும்.
- வெகுசன ஊடகம் வழியாக தகவல் பரிமாறப்படும்.
- தொடர்பாடுநர் பெறுநர் தொடர்பு காணப்படமாட்டாது.
- மேலதிகாரிகளின் கட்டமைப்பின் கீழ் நடைபெறும்.
- பொதுவான தகவல் பரிமாற்றம்.
- வாயிற்காப்பு செயன்முறையுடன் தொடர்புடையது.
- தொழில் சார் ஊடகவியலாளர் பங்கேற்பு காணக்கிடைக்கும்.
- பல்வேறு படிமுறைகள் ஊடாக நிகழப்பெறும். *(3 புள்ளிகள்)*

*(3 + 3 = 6 புள்ளிகள்)*

4)
- நிலமைப்பகுப்பாய்வும் பயனாளிகளை இனம் காணுதலும்.
- திட்டமிடல்.
- முறைகள் உத்திகளை தீர்மானித்தல்.
- முன்மதிப்பீடு
- இலக்கு மற்றும் நோக்கங்களினை வரையறுத்தல். *(4 புள்ளிகள்)*

*(இவற்றில் இரண்டு விபரித்திருந்தால் முழுப்புள்ளிகளும் வழங்குக.)*

*(4+4 = 8 புள்ளிகள்)*

*07)*

*1)*
- புதிய பொருட்கள் சேவைகளைப் பற்றி அறிந்து கொள்ளல்.
- விலை / பெறுமதி தொடர்பில் தகவலறிதல்.
- முன்கூட்டிய அறிவை / விளக்கத்தை பெறுதல்.
- தெரிவிப்பதற்காக செலவிடப்படும் நேரம் மீதப்படும்.
- ஒன்றோடு ஒன்று ஒப்பு நோக்கி எளிதில் தெரிவுகளை மேற்கொள்ளலாம்.
- பயன்பாடு தொடர்பான விளக்கம் கிடைத்தல். *(2 புள்ளிகள்)*

*2)*
- நவீன வெகுசன ஊடகங்களினை விட நம்பகத்தன்மையுடையதால்.
- சில நவீன வெகுசன ஊடகங்களை தமக்கு ஓரளவு புதியனவாக சமூகத்தின் சக்திமிக்க கேந்திரங்களில் வாழும் பிரபுகளின் மன உணர்வுகளை வெளிப்படுத்தகின்ற ஊடகங்களாக கருதுதல்.
- பாரம்பரிய ஊடகம் கிராமப்புற மக்களுக்கு நன்கு பரிச்சயமான ஊடகம்.
- பாரம்பரிய ஊடகம் நேயர்களின் செயற்றிறனான பங்களிப்பை பெற்றுக் கொண்டிருத்தல்.
- உலகின் முன்னேற்றமடைந்த நாடுகளிலும் இன்னமும் வெகுசன ஊடகங்கள் கிராமப் புறத்தில் வளர்ச்சியடையாமை. *(4 புள்ளிகள்)*

3) சீன மாதிரி

- மாவோசேதுங்கினால் அபிவிருத்தி திட்டம் பற்றி முன்வைக்கப்பட்டது.
- சமூகமட்டத்தில் அடிப்படை மெய்யறிவுவாத கருத்தியலை பரப்பும் நோக்கம் கொண்டது.
- கீழிருந்து மேலாக அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படும்.
- தேசிய அபிவிருத்திக்குரிய திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- பொது சமூக மெய்யறிவொன்றை கட்டியெழுப்புதல்.
- தேசிய அபிவிருத்திக் கொள்கைகளை நபரிடம் கொண்டு செல்லுதல்.
- தொழில் நுட்பமயாதலுக்கு அடிமையாக்குதல்.
- நல்லொழுக்கத்தை உறுதிப்படுத்துதல்.

agaram.lk

இருபடி நிலை மாதிரி

- லசார்பீல்ட் இனால் முன்வைக்கப்பட்டது.
- மேலிருந்து கீழ்நோக்கி அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படும்.
- மக்கள் கருத்துக்களுக்கு முதன்மையளிக்கப்பட மாட்டாது.
- அரச அதிகாரிகளுக்கு ஊடாக திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.
- தேசிய அபிவிருத்தி கொள்கைகளுக்கான பயன்படுத்தப்படும்.

இரண்டு மாதிரிகளும் வரைபடம் மூலம் தகுந்த வகையில் விளக்கியிருப்பின் புள்ளிகள் வழங்குக.

(3 x 2= 6 புள்ளிகள்)

4)
- இலக்கு மற்றும் நோக்கம் வரையறுத்தல்.
- பணிகள் விதிமுறைகள் பற்றி ஆராய்தல்.
- கட்சிதாரர் மற்றும் அமைப்பு கட்டமைப்பு.
- வரவு செலவு மற்றும் வளங்களின் தொகுப்பு.
- நேர அட்டவணை மற்றும் பொறுப்பு மூலப்பிரமானம்.
- எதிர்பார்க்கப்படும் பெறுபேறு.
- மதிப்பீட்டு நடவடிக்கை.
- முறைகள் விதிகள் உபாய வழிமுறை.

இவற்றில் நான்கு விடயங்கள் விபரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். (8 புள்ளிகள்)

agaram.lk